2017 ஜூலை 10]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள் குறிப்பிடும் சாலை, 2006–2011–ல் அவர்களுடைய அரசு இருந்தபோது, அவர்களுடைய கவனத்திற்கு வராமல் போயிருக்கிறது. வந்திருந்தால் அவர்களே நிறைவேற்றியிருப்பார்கள். இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தப் பணியை ஆரம்பிக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். B.D.O. செய்வதென்றால், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம்தான் சொல்ல வேண்டும்; ஒன்றும் பிரச்சினை இல்லை. இருந்தாலும், அந்தக் குறிப்புகளை உள்ளாட்சித் துறை அல்லது வனத் துறையிடம் அளிக்கலாம். அதை எப்படி நிறைவேற்றுவது என்பது எங்களுக்குத் தெரியும். எனவே, குறிப்புகளைக் கொடுத்தால், அந்தக் குறிப்புகளின் ஆதாரத்தை வைத்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

162—

பகுதிநேர நியாய விலைக் கடை

***14617—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, தென்தண்டலம் ஊராட்சி, வினாயகபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், அனக்காவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்

கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் வினாயகபுரம் பகுதியைச் சேர்ந்த 203 குடும்ப அட்டைகளையும் சேர்த்து, 362 குடும்ப அட்டைகளுடன் தென்தண்டலம் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. தற்போது அரசின் நிபந்தனைப்படி, வினாயகபுரம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் உறங்குகின்ற வள்ளலின் வாரிசு, வலப்புறத்தில் துயில்கொள்ளும் அண்ணாவின் புகழ் கொடியை வான்முட்டும் உச்சத்தில் வளம்பெற வைத்த எங்கள் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். வருங்கால தமிழகத்தை வல்லரசாகவும், சொல்லொணாத் துயரங்களைத் தூள் தூளாக்கி, ஓய்வறியா ஒளி விளக்கு, தரம், நிறம் மாறாத, கரம், சிரம் நீட்டாத, புறம்பேசாத மாசற்ற கொங்கு நாட்டுத் தங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) கடமையின் வடிவமாய், கண்ணியத்தின் பிறப்பிடமாய், (மேசையைத் தட்டும் ஒலி) கட்டுப்பாட்டின் உறைவிடமாய், (மேசையைத் தட்டும் ஒலி) மலை குலைந்தாலும், நிலை குலையாத கொள்கைத் தங்கம், எங்கள் பாசமிகு அண்ணன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் *10—15*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார். செய்யாறு தொகுதியிலுள்ள தென் தண்டலம் ஊராட்சி, தனி ஊராட்சி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். தென் தண்டலம் ஊராட்சி, தனி ஊராட்சி. ஆனால், நான் கோருகின்ற வினாயகபுரம் பகுதிநேரக் கடை அனக்காவூர் ஊராட்சியில் உள்ளடங்கிய பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 203 குடும்ப அட்டைகள்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். வினாயகபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. நாங்கள் வாக்கு சேகரிக்கச்

சென்றபோது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. கடந்த மாதம் மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரால் நடைபெற்ற அம்மா திட்ட நிகழ்ச்சியின்போதுகூட, இந்தக் கோரிக்கையை மக்கள் வலியுறுத்தினார்கள். வாக்களித்த மக்களுக்கு நாங்கள் நல்லது செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பு நேர்வாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாகவே அந்தப் பகுதிநேரக் கடையை திறந்து வைக்க ஆவன செய்வாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி. கே. மோகன் அவர்கள் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். குறிப்பாக பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பதற்கு சட்ட விதிகள் இருக்கின்றன. அதன்படி தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்க இருக்கின்ற பகுதிநேரக் கடைக்கான பகுதியில் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மலைப் பிரதேசமாக இருந்தால் 100 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தாய்க் கடைக்கும் பகுதிநேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் ஒன்றரை கிலோ மீட்டர் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கடை 1978 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டுவரை 4,441 நியாய விலைக் கடைகள் மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் கிராம மக்களுக்கு நியாய விலைப் பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில், ஒரு கிராமத்திற்கு ஒரு கடை என்ற அடிப்படையில் திறக்கப்பட்ட 12,000 நியாய விலைக் கடைகளில் மாண்புமிகு உறுப்பினர் கூறும் கடையும் ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் 203 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அது தனி பஞ்சாயத்து என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உறுதியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி. கே. மோகன் அவர்கள் மகிழ்ச்சியடைகின்ற வகையில்

துறை ரீதியாக நடவடிக்கை எடுத்து, பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

163—

மின் கட்டண வசூல் மையம்

***7214—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி நகர் பகுதியில் மின் கட்டண வசூல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொட்டாம்பட்டி நகரில் மின் கட்டண வசூல் மையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கொட்டாம்பட்டிக்கு அருகில் ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் துணை மின் நிலையம் இருக்கிறது. அங்கே மின் வாரியப் பிரிவு அலுவலகம் இருக்கிறது. அங்கே மின் கட்டணம் செலுத்துவதற்கு வசதி இருக்கின்ற காரணத்தினால், வரிசையில் நிற்க வேண்டிய தேவையில்லை என்பதை மாண்புமிகு